**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 109 of 2022**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** பாரதி | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A3 Present)**

**Dated.18.06.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது சமயபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது சிறுகனூர் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். ஆஜரில் உள்ள 1ம் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13.11.2020ம் தேதி நான் சிறுகனூர் காவல் நிலையத்தில் இருந்தபோது, சிறுகனூர் காவல் நிலைய குற்ற எண். 724/2020 இதச பிரிவு 379 வழக்கில் கடந்த 13.11.2020ம் தேதி காலை 09.45 மணிக்கு மேல் எதிரி பாரதிதாசன் கொணலையில் உள்ள NSR ஹோட்டல் முன்பு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரியானவர் சாட்சிகள் முன்னிலையில் சொல்ல சொல்ல நான் மடிக்கணினியில் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது என்னால் தட்டச்சு செய்யப்பட்டது என பதிவு செய்து கையொப்பம் செய்துள்ளேன்.

அந்த கையொப்பம் **அ.சா.ஆ.3/அ.சா.3** ஆகும். உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**/உண்மை நகல்/**

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.18 17:52:52 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 109 of 2022**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ராஜா** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A3 present. )**

**Dated.18.06.2026**

**முதல் விசாரணை**

நான் சரடமங்கலத்தில் வசித்து வந்து கேட்டரிங் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். இந்த கையெழுத்தை எங்கு வைத்து எப்போது எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்று தற்போது நியாபகமில்லை. பார்வை மகஜரில் உள்ள முதலவாது சாட்சி கையொப்பம் மட்டும். அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரிக்க வில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 13.11.2020ம் தேதி காலை 06.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் முன்பு நான் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது போலீசார் எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள்

என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், சுப்பிரமணியன் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.18 17:53:05 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 109 of 2022**

**Prosecution Witness : PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சுப்பிரமணியன்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A3 present. )**

**Dated.18.06.2026**

**முதல் விசாரணை**

நான் சரடமங்கலத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்க வில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 13.11.2020ம் தேதி காலை 06.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டின் முன்பு நான் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது போலீசார் எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், ராஜாவும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை

போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.18 17:52:58 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி